# அழகப்பாபல்கலைக்கழகம்,காரைக்குடி

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுமதிப்பீட்டில் A+ (CGPA : 3.64) தகுதிபெற்றது)

நாள்: 21.03.2018

இந்திய அளவில் உயர்கல்வித் துறையின் தரத்தை உயர்த்தும் சீரிய நோக்கத்துடன் பல்கலைக்கழக மானியக் குழு நாட்டின் 60 உயர் கல்வி நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்கியுள்ளது என்ற தகவலை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் 20.3.2018 அன்று இரவு ஊடகங்களுக்கு தெரிவித்தார். இத் தன்னாட்சி இக்கல்வி நிறுவனங்களின் தரமதிப்பீட்டு அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும், இது வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த 60 உயர்கல்வி நிறுவனங்களில், 25 பல்கலைக்கழகங்கள் முதல் தர வகையைச் சேர்ந்தவையாகும். 27 பல்கலைக்கழகங்கள் இரண்டாம் தர வகையைச்சேர்ந்தவை. எட்டு நிறுவனங்கள் தன்னாட்சி கல்லூரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

25 முதல் தரவகை பல்கலைக்கழகங்களில் 2 நிறுவனங்கள் மத்திய பல்கலைக்கழகங்கள் ஆகும். 12 நிறுவனங்கள் அரசு பல்கலைக்கழகங்கள் ஆகும். 11 பல்கலைக்கழங்கள் நிகர் நிலைப் பல்கலைக்கழகங்கள்.

இந்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தகவலைமேற்கோள் காட்டி அழகப்பாபல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா. சொ. சுப்பையா அவர்கள் தெரிவித்ததாவது:

இந்திய அளவிலான 12 முதல் தரவகை அரசுபல்கலைக்கழகங்களில் காரைக்குடி அழகப்பாபல்கலைக்கழகம் தேசிய தரமதிப்பீட்டுக் குழுமத்தின் மதிப்பீட்டில் பெற்றுள்ள புள்ளிகளின் அடிப்படையில் 3.64 புள்ளிகள் எடுத்து இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது என்றும், கொல்கட்டா ஜாதவ்பூர் பல்கலைக்கழகம் 3.68 புள்ளிகள் எடுத்து அரசு பல்கலைக்கழகங்களுள் முதல் இடத்தில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சென்னை அண்ணாபல்கலைக்கழகம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம், சென்னையும் இரண்டாம் தரவகை பெற்றுள்ளன. இந்நிறுவனங்களுக்கும் தன்னாட்சி அளிக்கப்பட்டுள்ளது.

தன்னாட்சிபெற்ற அழகப்பாபல்கலைக்கழகம், கீழ்க்காணும் பலன்களை பெற்றுள்ளது.

- பல்கலைக்கழகம் தானாகவே புதியதுறைகள், மையங்கள், பாடப் பிரிவுகள், தொடங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- புதிய ஆராய்ச்சி பூங்காக்கள், பல்கலைக்கழக சமூக தொடர்பு மையங்கள் மற்றும் தனியாருடன் இணைந்து புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் அனுமதி வேண்டத் தேவையில்லை.
- பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் பேராசிரியர்களை பணி அமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- அயல்நாட்டு மாணவர்களை எந்த வித தடைகளும் இன்றி பல்கலைக்கழகத்தில் படிக்க அனுமதிக்கலாம்.
- அயல்நாட்டு மாணவர்களை சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி வாயிலாக புதிய பாடத் திட்டங்களை வழங்குவதற்கு பல்கலைக்கழகமானியக் குழுவின் அனுமதி வேண்டத் தேவையில்லை.
- பல்கலைக்கழக பிரதானவளாகம் தவிர புறவளாக மையங்களை பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- மிகத் திறமையான ஆசிரியர்களுக்கு சம்பளத்தோடு கூடுதல் ஊக்கத் தொகை, பல்கலைக்கழக ஆட்சிக்குழு ஒப்புதலோடு, வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.
- உலகத்தரம் வாய்ந்த அயல்நாட்டுபல்கலைக்கழகங்களோடு இணைந்து புதிய பாடத்திட்டங்களை அமல்படுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பேரா. ஹா. குருமல்லேஷ் பிரபு
பதிவாளர்